[2020 ஜனவரி 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை பேரவை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'புத்தாண்டு பிறந்து, புதுமைகள் தொடரட்டும்; மகிழ்வோடு வரவேற்போம்.' அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். 'சந்தோஷமும், செல்வமும் நம் வாழ்வில் பொங்கிவர, ஜாதி, மத பேதமின்றி, சங்கடங்கள் ஏதுமின்றி, கைகூப்பி வரவேற்போம் 'தை' திருநாளை! இந்த நல்ல நேரத்திலே இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியினுடைய மற்ற தலைவர்கள் அனைவருக்கும், மற்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், வந்திருக்கும் அத்தனை பேருக்கும், இந்த அவையிலே வீற்றிருக்கிற அத்தனை உறுப்பினர்களுக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களையும், பொங்கல் வாழ்த்துக்களையும் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்கும் மீண்டும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

2020 ஜனவரி 9]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகுதுணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. அனைவருக்கும் மீண்டும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-44 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

30. 2019 ஆம் ஆண்டு மாவட்ட குழு விதிகளை இயற்றியது குறித்து9-9-2019 ஆம் நாளிட்ட சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4-2) துறையின் அரசாணை (நிலை) எண் 124-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*].